00127

இலங்கை திறந்த பல்கலைக்கழகம்
மானுடவியல் மற்றும் சமூகவிஞ்ஞானங்கள் பீடம்
சட்டக்கற்கைகள் திணைக்களம்
சட்டமாணி பட்டப்படிப்பு நிகழ்ச்சித் திட்டம்
மட்டம் - 04

**LLU4805– ஒப்பந்தச் சட்டம்**

தொடர் மதிப்பீட்டுப் பரீட்சை **II** - 2023/2024

காலம் : ஒரு (01) மணித்தியாலம்

திகதி : 08.01.2025 நேரம்: மு.ப 09.30 - மு.ப 10.30

மொத்த வினாக்களின் எண்ணிக்கை இரண்டு (02).
ஒரு (01) வினாவிற்கு மாத்திரம் விடையளிக்குக.
தெளிவற்ற கையெழுத்திற்கு புள்ளிகள் குறைக்கப்படும்.

1. (i) ஒப்பந்தச்சட்டத்தில் ஒரு புடை பிழை (unilateral mistake) மற்றும் பரஸ்பர பிழை (mutual mistake) முதலான கோட்பாடுகளை வரைவிலக்கணப்படுத்தி, அவற்றிற்கிடையிலான வேறுபாடுகளைச் சுட்டிக் காட்டுக.

( **08** புள்ளிகள்)

(ii) லிலானி எனும் ஒரு சொத்து முதலீட்டாளர் கொழும்பில் வீடு ஒன்றை வாங்குவதில் ஆர்வம் கொண்டுள்ளார். இவள், ரஞ்சித் எனும் விற்பனையாளரை தொடர்பு கொள்வதுடன், ரஞ்சித் லிலானிக்கு உடைமை ஒன்று அண்மையில் மீள்திருத்தம் செய்யப்பட்டுள்ளது என்பதுடன், இது ஒரு சிறந்த நிலையில் உள்ளது என்றும் குறிப்பிடுகிறார். இக்கூற்றின் அடிப்படையில், லிலானி ஆரம்பத்தில் வாங்குவதற்கு எண்ணிய விலையை விட மிக அதிகமான விலை ஒன்றிற்கு வீட்டை வாங்குவதற்கு இணங்குகிறாள். அவ்வீட்டிற்குள் குடிபுகுந்த பின்னர், அவ்வீடு மோசமான நிலையில் இருப்பதையும் எவ்வித திருத்தமும் மேற்கொள்ளப்படாது இருப்பதையும் அவள் கண்டறிந்தாள். வீட்டின் விற்பனை விலையை அதிகரிப்பதற்காக அத்தகு வாதம் ஒன்றை ரஞ்சித் மேற்கொண்டுள்ளான் என்றும், வீடு மோசமான நிலையில் இருப்பதையும் அவன் அறிந்திருந்தான் என்றும் அவள் அறிகிறாள். லிலானிற்கு கிடைத்தகு சட்டரீதியாக நிவாரணங்களை பொருத்தமான தீர்ப்புச்சட்டங்களை எடுத்துக்காட்டி அறிவுறுத்துக.

( **12** புள்ளிகள்)

2. (i) ஒப்பந்தச் சட்டத்தில் வலுக்கட்டாயம் (duress) மற்றும் தகாத செல்வாக்கு (undue influence) முதலாகிய கருத்தேற்புக்களை வரைவிலக்கணப்படுத்தி, அவற்றிற்கிடையிலான வேறுபாட்டை எடுத்துக்காட்டுக.

( **08** புள்ளிகள்)

(ii) பிரியா என்பவள் கொழும்பில் அமைந்துள்ள சமந்தா என்பவளிற்கு உரிமையான அழகு நிலையத்தின் ஊழியர் ஒருவர் ஆவார். பிரியாவின் தொழில் ஒப்பந்தம் பின்வரும் ஒரு வாசகத்தை உள்ளடக்குகிறது: "நீர் வேறு ஏதேனும் போட்டியாளர்களிற்காக பணியாற்றக் கூடாது என்பதுடன், இப்பணியிலிருந்து நீங்கிய பின்னர் பன்னிரெண்டு வருட காலத்திற்கு இலங்கையின் ஏதேனும் பாகத்தில் தனது சொந்த அழகு நிலையம் ஒன்றை ஆரம்பிக்கவும் இயலாது". சமந்தாவின் அழகு நிலையத்தில் இரு வருட காலம் பணியாற்றிய பின்னர், பிரியா பணியிலிருந்து நீங்கியதுடன், கண்டியில் அவளிற்கு சொந்தமான ஒரு அழகு நிலையத்தையும் திறந்தாள்.

மேலுள்ள ஒப்பந்தத்தில் உள்ள வாசகம் சட்டரீதியாக நடைமுறைப்படுத்தக் கூடியதா என உமது அறிவுரையை சமந்தா நாடுகிறாள். பொருத்தமான தீர்ப்புச்சட்டங்களை குறிப்பிட்டு உமது விடையை ஆதாரப்படுத்தி சமந்தாவிற்கு அறிவுறுத்துக.

( **12** புள்ளிகள்)

- முழுப்பதிப்புரிமை பெற்றது -